இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 304 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – வைகாசி 31 – புதன்கிழமை 14 ஜூன் 2023 – மதுரை 10 பக்கங்கள் Established:10.8.1942 - Volume:81 - Issue 304:Thiruvalluvar Year - 2054 - Vaikasi 31 - Wednesday 14 June 2023 - Madurai 10 Pages ₹ 5.00

## தேசிய மருத்துவத் தகுதித் தேர்வு:

# ஒன்றிய அரசு கைவிட வேண்டும்!

## பிரதமருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

**சென்னை, ஜூன் 14-**

**இளங்கலை மருத்துவ மாணவர்களுக்கான ஒருங்கிணைந்த தேசிய அளவிலான தேர்வாகவும், முதுகலை மாணவர் சேர்க்கைக்கான நுழைவுத் தேர்வாகவும் ஒன்றிய அரசு கொண்டுவர உத்தேசித்துள்ள NEXT என்ற தேசிய மருத்துவ தகுதித் தேர்வுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் உடனடியாக அதை ஒன்றிய அரசு கைவிட வேண்டும் என்று வலியுறுத்தியும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு நேற்று (13.6.2023) கடிதம் எழுதியுள்ளார்.**

**அதில், மருத்துவ மாணவர் சேர்க்கையில், நீட் தேர்வு ஏற்கெனவே மோசமான பாதிப்பினை ஏற்படுத்தியுள்ள நிலையில், NExT தேர்வை அறிமுகப்படுத்துவது கிராமப்புற மற்றும் சமூக ரீதியாக பின்தங்கிய மாணவர்களுக்கும், மாநில அரசின்கீழ் இயங்கும் மருத்துவக் கல்வி நிறுவனங்களுக்கும் பெரிய பாதிப்பினை ஏற்படுத்தும் என்பதால், NExT தேர்வு முறையினைக் கைவிட வேண்டுமென்றும், தற்போதுள்ள முறையே தொடர வேண்டும் என்றும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இதுகுறித்து பிரதமருக்கு எழுதியுள்ள கடிதம் வருமாறு:-



இளங்கலை மருத்துவ மாணவர்களுக்கான ஒருங்கிணைந்த தேசிய அளவிலான தேர்வாகவும், முதுகலை மாணவர் சேர்க்கைக்கான நுழைவுத் தேர்வாகவும் ஒன்றிய அரசு கொண்டுவர உத்தேசித்துள்ள தேசிய மருத்துவ தகுதித் தேர்வுக்கு (NExT) எங்களின் கடும் எதிர்ப்பினை மீண்டும் தெரிவிக்கும் வகையில் இக்கடிதத்தை எழுதுகிறேன். இது தொடர்பாக உங்களுக்கும் ஒன்றிய சுகாதாரத் துறை அமைச்சருக்கும் எழுதிய கடிதத்திலும் மனுக்களிலும் எங்களின் மிகக் கடுமையான எதிர்ப்பினை அறிமுக நிலையிலேயே தெரிவித்துள்ளோம்.

### அறிமுக நிலையிலேயே எதிர்ப்பு!

நீட் நுழைவுத் தேர்வாகட்டும் (NEET); தேசிய மருத்துவ தகுதித் தேர்வாகட்டும் (NExT) அவை அறிமுகம் செய்த போதே தமிழ்நாடு அரசு தொடர்ந்து தனது எதிர்ப்பினை தெரிவித்துள்ளது.

தேசிய மருத்துவ கமிஷன் சட்ட அடிப்படையிலான 'நீட்' நுழைவு தேர்வு முறையிலான மருத்துவ சேர்க்கையால் சமத்துவமின்மை, பள்ளிப் படிப்பு அடிப்படையில் தேர்வில் பிரச்சினை, பொது சுகாதார முறையில் பிரச்சினை ஏற்பட்டு வருகிறது.

இத்தகு நிலையில், புதியதாக அறிமுகம் செய்யப்படும் தேசிய மருத்துவத் தகுதித் தேர்வால் மேலும் பிரச்சினை வலுப்பெறும் என்பதோடு, ஊரகப் பகுதியில் உள்ள மாணவர்களும் சமுதாயத்தில் பிற்படுத்தப்பட்ட மாணவர்களும் வெகுவாக பாதிக்கப்படுவார்கள். அத்துடன் மாநில அரசுகளின் கீழுள்ள பொது மருத்துவ பயிலகங்களும் பாதிப்பிற்குள்ளாகும்.

ஏற்கனவே, தேசிய மருத்துவக் குழுவின் நடைமுறைப்படிதான், அனைத்து மாநிலங்களிலும் உள்ள மருத்துவக் கல்லூரிகளில் பாடத்திட்டங்கள் வகுக்கப்பட்டு கற்பிக்கப்பட்டு வருகிறது.

### மாணவர்களுக்கு தரப்படும் மனஉளைச்சலை தவிர்ப்பீர்!

அத்துடன் மாநில மருத்துவப் பல்கலைக் கழகங்களின் மூலம் பாடத்திட்டங்கள், கற்பிக்கும் முறை, தேர்வு முறை உள்ளிட்டவைகள் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. அதன் அடிப்படையில்தான் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவக் கல்லூரிகள் மூலம் எம்.பி.பி.எஸ். பட்டம் வழங்கப்பட்டு வருகிறது.

இப்படிப்பட்ட நிலையில், பொதுவான தகுதித் தேர்வு அறிமுகப்படுத்துவது என்பது நிச்சயம் மாணவர்களுக்கு கூடுதலான சிரமத்தையே கொடுக்கும். கூடுதல் பாடச் சுமை, மன உளைச்சல் இவை மருத்துவ மாணவர்களுக்கு தரப்படுவதை நிச்சயம் தவிர்க்க வேண்டும்.

அத்துடன் இதுபோன்ற தகுதித் தேர்வைக் கட்டாயமாக்குவது மருத்துவக் கற்றல் (CLINICAL LEANING) மாணவர்களுக்கு ஒரு தடையாக இருக்கும்,

> **நீட் நுழைவுத் தேர்வாகட்டும் (NEET); தேசிய மருத்துவ தகுதித் தேர்வாகட்டும் (NExT) அவை அறிமுகம் செய்த போதே தமிழ்நாடு அரசு தொடர்ந்து தனது எதிர்ப்பினை தெரிவித்துள்ளது.**

எம்.பி.பி.எஸ். முடித்தவர்களுக்கு இந்த கிளினிக்கல் முறை மிக முக்கியமாகும். இன்றைய தினம் இளங்கலை மருத்துவ மாணவர்கள் மருத்துவ அறிவியலின் தத்துவார்த்த மற்றும் கிளினிக்கல் அம்சங்களில் கவனம் செலுத்துகிறார்கள். பட்டப் படிப்பிற்குப் பின் தான் முதுகலையில் சேர்பவர்கள் தத்துவார்த்த (THEORETICAL) தேர்வுகளில் கவனம் செலுத்துகிறார்கள்.

ஆனால் இந்த தேசிய மருத்துவ தகுதித் தேர்வு அறிமுகப்படுத்தினால் அத்தகு மாணவர்கள், அவர்களின் மருத்துவத்திறன் வளர்ச்சி தடுக்கும் வகையில் அவர்கள் படிக்கும் போதும் பயிற்சி மேற்கொள்ளும்போதும் தத்துவார்த்த அறிவியலில் மட்டும் கவனம் செலுத்துவர். கிளினிக்கல் தகுதி இல்லாமல் போய்விடும்.

### மாணவர் நலனுக்கு உகந்ததல்ல!

இவைகளின் காரணமாக நான் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி கேட்டுக் கொள்வது. புதியதாக அறிமுகப்படுத்த இருக்கும் தேசிய மருத்துவ தகுதித் தேர்வு மாணவர் நலனுக்கும் உகந்ததல்ல; மாநில அரசுகளால் நிதி உதவி பெறும் மருத்துவக் கல்லூரிகளுக்கும் உகந்ததல்ல.

இந்த புதிய நடைமுறையானது, மாநில அரசுகள் மற்றும் மருத்துவக் கல்லூரிகளின் பங்களிப்பை நீர்த்துப் போகச் செய்யும் இன்னொரு நடவடிக்கை என்பதோடு, ஒன்றிய அரசிடம் அதிகாரத்தை மையப்படுத்துவது என்பதாகும். எனவே இந்த தேசிய மருத்துவ தகுதித் தேர்வு முறையை அறிமுகப்படுத்தக்கூடாது என்றும், ஏற்கனவே உள்ள நடைமுறையே நீடிக்கவேண்டும் என்றும் மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தனது கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

## ஓசூர் பகுதியில் சிப்காட் தொழிற்பூங்காக்களுக்கு

# ரூ.187.20 கோடியில் சுத்திகரிப்பு ஆலை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

**சென்னை, ஜூன் 14-**

**ரூ.187.20 கோடியில் ஓசூர் பகுதியில் உள்ள சிப்காட் தொழிற் பூங்காக்களுக்கான சுத்திகரிப்பு ஆலை (TTRO Plant) நிறுவுவதற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.06.2023) தலைமைச் செயலகத்தில், தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையின் சார்பில், கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் கெலவரப்பள்ளி அணையிலிருந்து சிப்காட் தொழிற் பூங்காக்கள் மற்றும் பிற தொழிற்சாலைகளுக்கு இரண்டு கட்டங்களாக 20 MLD கொள்ளளவு கொண்ட மூன்றாம் நிலை எதிர் சவ்வூடுபரவல் சுத்திகரிப்பு ஆலையை (TTRO Plant) 187.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவுவதற்கான திட்டப் பணிக்கு அடிக்கல் நாட்டினார். மேலும், சிப்காட் சார்பில் 537 பள்ளிகளுக்கு பலசெயல்பாட்டு அச்சுப்பொறிகளை கொள்முதல் செய்து வழங்குவதற்காக பள்ளிக்கல்வித் துறைக்கு 50 இலட்சம் ரூபாய்க்கான




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.06.2023) தலைமைச் செயலகத்தில், தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையின் சார்பில், கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் கெலவரப்பள்ளி அணையிலிருந்து சிப்காட் தொழிற் பூங்காக்கள் மற்றும் பிற தொழிற்சாலைகளுக்கு இரண்டு கட்டங்களாக 20 MLD கொள்ளளவு கொண்ட மூன்றாம் நிலை எதிர் சவ்வூடுபரவல் சுத்திகரிப்பு ஆலையை (TTRO Plant) 187.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவுவதற்கான திட்டப் பணிக்கு அடிக்கல் நாட்டினார்.

காசோலை வழங்கப்பட்டது.

சிப்காட் நிறுவனம் தமிழ்நாட்டில் பெரிய மற்றும் நடுத்தர தொழில்கள் உடனடியாக தொடங்கிட ஏதுவாக தொழில் வாய்ப்புள்ள பகுதிகளில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய தொழில் பூங்காக்களை ஏற்படுத்தி, பராமரித்து வருகிறது. இந்நிறுவனம் இதுநாள் வரை 6 சிறப்பு பொருளாதார மண்டலங்கள் உட்பட 28 தொழிற் பூங்காக்களை, மொத்தம் 38 ஆயிரத்து 538 ஏக்கரில் ஏற்படுத்தி உள்ளது. இத்தொழிற் பூங்காக்களில் தற்போது வரை 3 ஆயிரத்து 142 நிறுவனங்களுக்கு நில ஒதுக்கீடு செய்து, 7 இலட்சத்து 56 ஆயிரம் நபர்கள் வேலைவாய்ப்பு பெறும் வகையில் சிறப்பாக செயல்பட்டு வருகின்றது.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

## 'பிபோர்ஜோய்' புயல்: குஜராத்தில் நாளை கரையைக் கடக்கிறது!

*புதுடெல்லி, ஜூன் 14-*

*அரபிக் கடலின் கிழக்கு மத்திய பகுதியில் இந்த மாத தொடக்கத்தில் குறைந்த காற்றழுத்தம் உருவானது. அதன் பிறகு அது கடந்த 6ந்தேதி புயலாக மாறியது. அந்த புயலுக்கு 'பிபோர் ஜோய்' என்று பெயரிடப் பட்டுள்ளது. அந்த புயல் வடக்கு திசை நோக்கி கடந்த சில தினங்களாக நகர்ந்து வந்தது. இந்த நிலையில் அது தீவிர புயலாகவும், அதி தீவிர புயலாகவும் அடுத்தடுத்து மாறியது. வடகிழக்கு அரபிக் கடலில் நிலை கொண்டிருக்கும் 'பிபோர் ஜோய்' புயல் மணிக்கு 8 கி.மீ. வேகத்தில் நகர்ந்து வருகிறது.*



*இந்த அதிதீவிர புயல் குஜராத்தின் போர்பந்தரில் இருந்து 250 கி.மீ. தொலைவில் உள்ளது. இது வியாழக்கிழமை அன்று குஜராத்தின் ஜக்காவ் துறைமுகப் பகுதியில் கரையைக் கடக்கும் என்று வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. அதி தீவிர புயல் கரையை கடக்கும்போது பலத்த மழையும், பலத்த காற்றும் வீசும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.*

*குறிப்பாக மணிக்கு 125 முதல் 150 கி.மீ. வேகத்தில் சூறாவளி காற்று வீசும் என்று கூறப்பட்டு இருந்தது. அதன் படி மராட்டியம், குஜராத் மாநிலங்களில் நேற்று முதல் மிக பலத்த மழையும், மிக பலத்த சூறாவளி காற்றும் வீசத் தொடங்கியுள்ளது. மும்பையில் கடல் கொந்தளிப்பு காணப்படுகிறது. அதில் 4 பேர் சிக்கினார்கள். ஒருவர் மீட்கப்பட்ட நிலையில் 3 பேரின் கதி என்னவென்று தெரியவில்லை. இதற்கிடையே புயல் காரணமாக நாளை மற்றும் நாளை மறுநாள் குஜராத்தின் கட்ச், துவாரகா, போர்பந்தர், ஜாம்நகர், ராஜ்கோட், ஜூனாகர், மோர்பி உள்ளிட்ட மாவட்டங்களில் கனமழை பெய்யும் என்று அறிவுறுத்தப்பட்டு உள்ளது. புயல் காரணமாக குஜராத்தின் கட்ச் மாவட்டத்தில் 144 தடை உத்தரவு அமல் செய்யப்பட்டுள்ளது. அந்த மாவட்டத்தில் பள்ளி, கல்லூரிகளுக்கு இன்று முதல் 3 நாட்கள் விடுமுறை விடப்பட்டுள்ளது. புயல் அபாயம் உள்ள இதர மாவட்டங்களிலும் முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.*